அடிப்படையில் *25-1-2001* அன்று பேரவைக் கூட்டம் இல்லையென அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், *25-1-2001* ஆம் நாளன்று பேரவைக் கூட்டம் நடைபெறும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆளுநரின் உரையின் மீதான விவாதத்திற்கு அன்று பதிலளிப்பார்கள் என்று பேரவையின் அனுமதியோடு தெரிவிக்கின்றேன்.

முற்பகல் 11-15

5. அறிக்கை அளித்தல்

பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் 306 முதல் 310 வரையிலான 5 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

6. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்-தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ள திருத்தங்கள் இன்று முன்மொழியப்பட்டு, வழிமொழியப்பட வேண்டும். திரு. வி.கே. லட்சுமணன்.

திரு. வி.கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு நான் கீழ்க்கண்ட திருத்தங்களை முன்மொழிகிறேன்;

"தீர்மானத்தில் பின்வருமாறு சேர்க்கப்பட வேண்டும்: 'கோவை நகரில் சிறுவர் உலகம் நிறுவ அரசு மேற்கொண்ட முயற்சிகள் குறித்தும்;

கோவை நகரில் கோளரங்கம் ஒன்று நிறுவுவது குறித்தும்;

கோவை நகரில் புறம்போக்கு நிலங்களில் 10 ஆண்டுகளுக்குமேல் குடியிருக்கும் ஏழைகளுக்கு மனைப்பட்டா வழங்குவது குறித்தும்;